# சாதாரணக் கூட்டம்

**அன்புடையீர்**

வணக்கம். பல்லடம் நகராட்சி நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் வருகிற 29.01.2025 புதன்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் நகர்மன்ற தலைவர் திருமதி.கவிதாமணி ராஜேந்திரகுமார்,B.B.M., அவர்களின் தலைமையில் கீழ்க்கண்ட பொருட்களை பரிசீலித்து நகர்மன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெற உள்ளது. அவ்வமயம் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## பொருள் :01

பல்லடம் நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோரது டிசம்பர் 2024 மாதத்தின் நாட்குறிப்பு நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்:1065/2020/சி1)

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :02

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2024–2025ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு 13.01.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் : 01 முதல் 18 வரை உள்ள 13 குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளிலிருந்து குடிநீர் விநியோகம் மற்றும் Liquid Chlorination ஆகிய பணிக்கு ஆட்கள் சப்ளை செய்தல் (Outsourcing) | 14.00 | திரு.வி.சுப்பிரமணியன், ஒப்பந்ததாரர், பல்லடம். | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.04% குறைவு |
| | | | M/s. அன்னை எண்டர்பிரைசஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர். | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.17% குறைவு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s. அன்னை எண்டர்பிரைசஸ் (மதிப்பீட்டினை விட 0.17% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்:3124/2024/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :03

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2024–2025ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு 13.01.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்: 01 முதல் 18 வரை உள்ள நகராட்சிக்கு சொந்தமான 109 ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் 13 திறந்தவெளிக் கிணறுகள் மூலம் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு | 14.50 | திரு.வி.சுப்பிரமணியன், ஒப்பந்ததாரர், பல்லடம். | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.06% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | தண்ணீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஆட்கள் சப்ளை செய்தல் (Outsourcing) | | M/s. அன்னை எண்டர்பிரைசஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர். | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.17% குறைவு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s. அன்னை எண்டர்பிரைசஸ் (மதிப்பீட்டினை விட 0.17% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்:3124/2024/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் :04</u>

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2024–2025ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு 13.01.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி பொறியியல் பிரிவிற்கு தொழில்நுட்ப பணியாளரை அமர்த்துதல் பணி | 3.00 | திரு.வி.சுப்பிரமணியன், ஒப்பந்ததாரர், பல்லடம். | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.07% குறைவு |
| | | | M/s. அன்னை எண்டர்பிரைசஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர். | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.09% குறைவு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s. அன்னை எண்டர்பிரைசஸ் (மதிப்பீட்டினை விட 0.09% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்:3124/2024/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் :05</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண்:01 முதல் 18 வரை உள்ள பொதுமக்களுக்கு தினந்தோறும் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு நகராட்சிக்கு சொந்தமான 108 எண்ணிக்கையிலான ஆழ்துளைக்கிணறு மற்றும் 13 எண்ணிக்கையிலான திறந்தவெளி கிணறுகள் மூலம் விநியோகம் செய்வதற்கு ஆட்கள் சப்ளை செய்தல் பணிக்கு ஒப்பந்த காலம் 19.01.2025 உடன் முடிவடைந்து விடுவதால், ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரை (31.01.2025 வரை) 12 நாட்களுக்கு ஒப்பந்த காலம் நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினத் தொகை ரூ.1.00 இலட்சத்தினை பொது நிதியிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும், மேற்காணும் பணியானது குடிநீர் விநியோகப் பணி என்பதால் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்:3124/2024/இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் :06</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண் : 01 முதல் 18 வரை உள்ள 13 குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளிலிருந்து குடிநீர் விநியோகம் மற்றும் Liquid Chlorination ஆகிய பணிக்கு ஆட்கள் சப்ளை செய்தல் பணிக்கு ஒப்பந்த காலம் 16.01.2025 உடன் முடிவடைந்து விடுவதால், ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரை (31.01.2025 வரை) 15 நாட்களுக்கு ஒப்பந்த காலம் நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினத் தொகை ரூ.1.20 இலட்சத்தினை பொது நிதியிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும், மேற்காணும் பணியானது குடிநீர் விநியோகப் பணி என்பதால் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்:3124/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :07

நகராட்சிப் பொறியியல் பிரிவிற்கு தொழில்நுட்ப பணியாளரை அமர்த்துதல் பணிக்கு ஒப்பந்த காலம் 11.01.2025 உடன் முடிவடைந்து விடுவதால், ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரை (31.01.2025 வரை) 20 நாட்களுக்கு ஒப்பந்த காலம் நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினத் தொகை ரூ.0.44 இலட்சத்தினை பொது நிதியிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும், மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்:3124/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :08

பல்லடம் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் 2023-24 மற்றும் 2024-2025 தொடர்பான விபரத்தினை தினமலர் தினசரி நாளிதழில் 19.12.2024 அன்று விளம்பரம் செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.67,200/-ஐ "Viswa add agencies. திருப்பூர்" அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 279/2020/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :09

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் கழிவுநீரினை சுத்திகரிக்க வடுகபாளையம்புதூர் கிராம ஊராட்சி க.ச.எண் 86/1A, 86/2 ல் 3.16 ஏக்கர் பரப்பளவில் 4 MLD திறனுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைத்தல் மற்றும் நகராட்சி பகுதிகளில் 11.52 கி.மீ. நீளத்திற்கு இடைமறித்தல் மற்றும் திசைதிருப்பல் (I&D) ஆகிய பணிகளை தூய்மை பாரத இந்தியா திட்டம் 2.0 (SBM-U) 2024-25 திட்டத்தின் கீழ் ரூ.13.97 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்: 26740/2024/SBM-1 நாள்: 06.09.2024 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் நிதி பகிர்வு விவரம் பின்வருமாறு :-

(ரூ. கோடியில்)

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | மத்திய அரசு பங்குத் தொகை GoI (50%) | மாநில அரசு பங்குத் தொகை GoTN (33%) | நகராட்சி பங்குத் தொகை ULB (17%) |
|---|---|---|---|---|---|
| 1 | கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைத்தல் (ரூ.8.44 கோடி) மற்றும் நகராட்சி பகுதிகளில் 11.52 கி.மீ. நீளத்திற்கு இடைமறித்தல் மற்றும் திசைதிருப்பல் (I&D) பணிகள் மேற்கொள்ளுதல் (ரூ.5.53 கோடி) | 13.97 | 6.99 | 4.61 | 2.37 |

மேற்காணும் பல்லடம் நகராட்சிப் பங்குத் தொகை ரூ.2.37 கோடியை நகராட்சி பொதுநிதியிலிருந்து ஈடு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 10

பல்லடம் நகராட்சி மங்கலம் சாலையில் புதியதாக கட்டப்பட்டுள்ள 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் தரைத்தளக் கற்கள் பதித்தல் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு ரூ.3.00 இலட்சம் செலவில் பொது

நிதியிலிருந்து மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 230/2025/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 11

பல்லடம் நகராட்சியின் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்:04.12.2024–ன் படி நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கு31.12.2024–ஆம் தேதியன்று நடைபெற்ற பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வரிசை எண்:6 மற்றும் 13–ல் கண்டுள்ள இனத்திற்கு மட்டும் வைப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளியி பங்கு பெற்றனர். மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் மற்றும் பொதுஏலத்தில் கலந்து கொண்டவர்கள் அளித்துள்ள அதிகபட்சத் தொகை விவரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடைகள் மற்றும் குத்தகை இனங்கள் விவரம் | ஒப்பந்தப்புள்ளி / ஏலம் கோரியவரின் பெயர் விவரம் | ஒப்பந்த தொகை விவரம் (ஒரு வருடத்திற்கு) |
|---|---|---|---|
| 1) | வாரச்சந்தை சுங்கம் வசூலிக்கும் உரிமம் (வரிசைஎண்.13) | **பி.ஆர்.அங்குராஜ்<br>14–1, ராமசாமிநாயக்கர்சந்து,<br>கொசவம்பாளையம் ரோடு,<br>பல்லடம் – 641 664<br>98422 52645** | **ரூ. 15,72,000/–** |
| | | கே.மோகன்ராஜ்<br>65/70 ஆர் எஸ் புரம்,<br>கோவை – 1<br>96552 25006 | ரூ. 15,21,000/– |
| 2) | தினசரி மார்கெட் கிழக்கு பார்த்த கடைஎண்.5/9 (வரிசைஎண்.6) | **த.தாமரைச் செல்வி<br>பாரதிபுரம்,<br>பல்லடம்–641 664<br>95240 45266** | **ரூ. 13,501/–** |
| | | த.தாமிழ்ச் செல்வன்<br>பாரதிபுரம்,<br>பல்லடம்–641 664<br>95240 45266 | ரூ. 12,500/– |
| 3) | தினசரி மார்கெட் கிழக்கு பார்த்த கடைஎண்.6/9 (வரிசைஎண்.6) | **பி.சிவகாமி,<br>181 சின்னப்பகவுண்டர் வீதி,<br>பல்லடம் – 641 664<br>95248 18433** | **ரூ.13,700/–** |
| | | எஸ்.பிரித்தி,<br>30, சின்னப்பகவுண்டர் வீதி,<br>பல்லடம் – 641 664<br>86681 61700 | ரூ.13,650/– |

அ) மேற்படி வரிசை எண்.1–ல் உள்ள வாரச்சந்தை சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.பி.ஆர்.அங்குராஜ் என்பவர் ரூ.15,72,000/–க்கும் திரு.கே.மோகன்ராஜ் என்பவர் ரூ.15,21,000/–க்கும் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்துள்ளார்கள், எனவே, அதிகபட்சமாக ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.பி.ஆர்.அங்குராஜ் என்பவருக்கு குத்தகை நிபந்தனைகளுக்கு உட்பட்டு உரிமத்தினை 01.02.2025 முதல் ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ஆ) மேற்படி வரிசை எண்.2–ல் உள்ள தினசரி மார்கெட் கிழக்கு பார்த்த கடைஎண்.5/9 திருமதி.த.தாமரைச்செல்வி என்பவர் ரூ.13,501/–க்கும் திரு.த.தாமிழ்ச்செல்வன் என்பவர் ரூ.12,500/–க்கும் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்துள்ளார்கள், எனவே, அதிகபட்சமாக ஒப்பந்தப்புள்ளி கோரிய திருமதி.த.தாமரைச்செல்வி என்பவருக்கு குத்தகை நிபந்தனைகளுக்கு உட்பட்டு கடையினை ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

இ)மேற்படி வரிசை எண்.3–ல் உள்ள தினசரி மார்கெட் கிழக்கு பார்த்த கடைஎண்.6/9 திருமதி.பி.சிவகாமி என்பவர் ரூ.13,700/–க்கும் திருமதி.எஸ்.பிரித்தி என்பவர் ரூ.13,650/–க்கும் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்துள்ளார்கள், எனவே, அதிகபட்சமாக ஒப்பந்தப்புள்ளி கோரிய திருமதி.பி.சிவகாமி என்பவருக்கு குத்தகை நிபந்தனைகளுக்கு உட்பட்டு கடையினை ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. அதிகபட்ச தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி/ஏலம் கோரியவர்களுக்கு உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேலும் ஏலம் போகாத கடைகள் மற்றும் ஆண்டு குத்தகை இனத்திற்கும் மீண்டும் குறுகிய கால மறுபொது ஏலம் / மறுஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம்அனுமதிக்கலாம். (ந.கஎண்: 1422/2014/அ2)

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 12

இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மான எண். 240 நாள்:24.09.2023 ன் படியும், ந.க.எண்.943/2023 நாள். 29.09.2023 – இன்படியும், பல்லடம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் ஒழிப்புபணிகள், கொசுப்புழு ஒழிப்பு பணிகள் போன்ற பணிகளுக்கு 50 களப்பணியாளர்கள் நியமித்து கடந்த 01.10.2023 முதல் தற்போது வரை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.941/2023 நாள். 10.09.2024 – இன்படி கொசு ஒழிப்பு பணியினை மூன்று மாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டது.

மேற்படி, மூன்று மாத கால தற்காலிக காலநீட்டிப்பானது 11.12.2024 உடன் முடிவடைந்ததாலும், நோய் தடுப்பு பணிகளின் அசர அவசயம் கருதியும் பொதுமக்களை கொசுக்களினால் ஏற்படக்கூடிய தொற்று நோய்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு ஏற்கவே நடைமுறையில் உள்ள ஒப்பந்த விதிகளின்படி மேலும் மூன்று மாத காலத்திற்கு 12.12.2024 முதல் 11.03.2025 வரை காலநீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கவும்,அதற்காகும் செலவினத்தொகை ரூ.25.00 இலட்சத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 943/2023/எச்1)

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 13

பல்லடம் நகராட்சி பகுதிகளில் சுற்றி திரியும் தெருநாய்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை மற்றும் ரேபிஸ் தடுப்பூசி செலுத்தும் பணியானது கடந்த செப்டம்பர் 2024 முதல் சுழற்சி முறையில் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி அறுவை சிகிச்சைக்கு அரசு நிர்ணயம் செய்த தொகை ரூ.1650/– (1 தெருநாய்க்கு) வீதம் தெருநாய்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப செலவினம் மேற்கொள்ள தோராயமாக ரூ.4.00 இலட்சத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 1294/2021/எச்1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 14

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பொள்ளாச்சி ரோடு, மங்கலம் ரோடு, மாணிக்காபுரம் ரோடு, மாணிக்காபுரம் ரோடு ரேசன் கடை பின்புறம், பச்சாபாளையம் மின்மயானம், மேற்கு பல்லடம், கொசவம்பாளையம் ரோடு, ஸ்ரீ நகர் ஆகிய இடங்களில் புதியதாக மின் இணைப்புகள் பெறுவதற்கு C-Licensed ஒப்பந்ததாரர் கட்டணம் ரூ.18,945/–னை அரசு அங்கீகாரம் பெற்ற C-Licensed திரு.பி.சிவக்குமரன், பல்லடம் அவர்களுக்கு பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 1486/2020/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :15

பல்லடம் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் 2023–24 மற்றும் 2024–2025 தொடர்பான விபரத்தினை தினகரன் தினசரி நாளிதழில் 19.12.2024 அன்று விளம்பரம் செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.37,800/–ஐ "KAL Publications Pvt. Ltd, கோவை" அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 279/2020/இ1)

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 16**

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 சட்டம் 57 (7) ன் கீழ் அவசர அவசியம் கருதி கீழ்க்கண்ட செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. வார்டு எண் 08 பச்சாபாளையம் மின்மயானம் செல்லும் சாலையில் உள்ள திறந்தவெளி கிணற்றிற்கு மூடி அமைத்தல் பணிக்கு ரூ.47,830/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.
2. வார்டு எண் 14 நியூ எக்ஸ்டன்சன் வீதியில் ஒருங்கிணைந்த குழய்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலகம் அருகில் உள்ள கருங்கற்களால் ஆன ஆர்ச்சை இடித்து அப்புறப்படுத்துதல் பணிக்கு ரூ.29,843/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.
3. குடிநீர் வாகனம் எண் TN 42 F 9285க்கு பராமரிப்பு பணி செய்ய ரூ.52,974/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.
4. வார்டு எண் 06 இராயர்பாளையம் அறிவுத் திருக்கோவில் அருகில் உள்ள கழிப்பிடத்திற்கு புதியதாக கதவுகள் அமைத்தல் பணிக்கு ரூ.31,341/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.
5. பல்லடம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்படும் மாதப்பூர் நுண்ணுயிர் உரக்கிடங்கில் உள்ள மண் மேடுகளை ஜே.சி.பி. இயந்திரம் மற்றும் டிப்பர் லாரி கொண்டு சமன்படுத்துதல் பணிக்கு ரூ.1,51,615/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.
6. வார்டு எண் 06 இராயர்பாளையம் பேருந்து நிறுத்தம் முதல் திருப்பூர் சாலையில் தெற்கு பகுதி வரை குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கான குழாய் பதித்தல் பணிக்கு ரூ.27,239/– செலவினம் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட செலவினங்கள் மேற்கொண்டதற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 17**

பல்லடம் நகராட்சியில் 1–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. சாந்தினி சைசிங் முதல் மங்கலம் ரோடு வரை ஓடையில் உள்ள புதர்களை தூர்வாரித் தர கோருதல்
2. மேற்கு கல்லம்பாளையம் பள்ளி வடிவேல் வீடு முதல் பொதுக்கழிப்பிடம் வரை மழைநீர் வடிகால் அமைத்துத் தர கோருதல்
3. மேற்கு கல்லம்பாளையம் முதல் வீரபத்திரன் தோட்டம் வரை தெருவிளக்கு அமைத்து தரக் கோருதல்
4. மேற்கு கல்லம்பாளையம் நகராட்சி பள்ளி கழிப்பிடத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் கேட் அமைத்து தரக் கோருதல்
5. மேற்கு கல்லம்பாளையம் அங்கன்வாடி மையத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்து தரக் கோருதல்
6. மங்கலம் ரோடு பொன் அவென்யூ பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து தரக் கோருதல்
7. மேற்கு கல்லம்பாளையம் ஓடை செல்லும் சாலையில் புதியதாக பூஸ்டர் மோட்டர் மற்றும் VMK நகர் பகுதியில் குடிநீர் குழாய் அமைத்து தரக் கோருதல்
8. ரங்கநாத ஆசாரி வீதி, முருகநாத கவுண்டர் வீதி, சின்னமூப்பன் வீதி, போயர் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள தார் சாலையை சீரமைத்து தரக் கோருதல்

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 18**

பல்லடம் நகராட்சியில் 3–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. நாரணாபுரம் செல்லும் சாலையில் கழிப்பிடம் முதல் தர்மலிங்கம் வீடு வரை புதியதாக தெருவிளக்கு அமைத்துத் தர கோருதல்
2. நாரணாபுரம் மேல்நிலைத் தொட்டி அருகில் உள்ள கழிப்பிடத்திற்கு பராமரிப்பு பணி செய்து தரக் கோருதல்
3. நாரணாபுரம் முத்து கவுண்டர் வீதியில் மழைநீர் வடிகால் அமைத்துத் தர கோருதல்
4. நாரணாபுரம், தெற்குபாளையம் அரிசன காலனி பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் பராமரித்தல் மற்றும் குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கான குழாய் அமைத்துத் தர கோருதல்
5. நாரணாபுரம் சுகாதார மையத்திற்கு சுற்றுசுவர் அமைத்தல்
6. நாரணாபுரம் மருதான்செட்டி தோட்டம் பகுதியில் குடிநீர் குழாய் மாற்றி தர கோருதல்

<u>பொருள் : 19</u>

பல்லடம் நகராட்சியில் 6–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. சக்திநகர் சாலையின் இருபுறமும் குடிநீர் குழாய் மாற்றித் தர கோருதல்
2. கிருஷ்ணா நகர் பகுதியில் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கான குழாய் அமைத்து தரக் கோருதல்

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் : 20</u>

பல்லடம் நகராட்சியில் 9–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. காமராஜ் நகர் பகுதியில் 4 தெருவிளக்கு அமைத்துத் தர கோருதல்
2. பெரிய பள்ளிவாசல் வீதியில் பள்ளிவாசல் தென்புறம் முதல் பட்டேல் வீதி வரை பழுதடைந்துள்ள குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கான குழாயை மாற்றி தரக் கோருதல்
3. காமராஜர் நகர் பின்புறம் உள்ள ஐயப்பன் கோவில் வீதி இணையும் இடத்தில் பழுதடைந்துள்ள குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கான குழாயை மாற்றி தரக் கோருதல்
4. பட்டேல் சாலையில் உள்ள மழைநீர் வடிகால் ஓடைகளை சீரமைத்து தரக் கோருதல்

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் : 21</u>

பல்லடம் நகராட்சியில் 12–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. பள்ளிவாசல் சாலையை புதுப்பித்து தரக் கோருதல்
2. அண்ணாநகர் வடக்கு பகுதியில் குடிநீர் குழாயை மாற்றி தரக் கோருதல்
3. கோழிப்பண்ணை வீதியில் புதியதாக கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைத்து தரக் கோருதல்

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் : 22</u>

பல்லடம் நகராட்சியில் 14–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. அரிசன காலனி பொதுக்கழிப்பிடம் முதல் சின்னையா கார்டன் பிரிவு வரை பழுதடைந்துள்ள குடிநீர் குழாயை மாற்றி தரக் கோருதல்

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

**நகர்மன்றத் தலைவர்**
**பல்லடம் நகராட்சி**